# ஈழநாதம்

EELANATHAM — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 10

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 24 | 07-04-2003 | திங்கட்கிழமை | ஓசை 48



வவுனியா நகரில்
வசந்தம் வீசும்
புடைவை உலகில்
உங்களின் நட்புக்கு.

சாந்தா ரெக்ஸ்

பஜார் வீதி, வவுனியா
T.P:24-22879
(சி-7828)


# பாக்தாத் மீது இறுதித் தாக்குதல் நடத்த அமெரிக்கப் படைகள் தயாராகிவருகின்றன

## ஈராக் படைகள் கடும் எதிர்த்தாக்குதல் இரவில் மக்கள் நடமாடவும் தடை

(பாக்தாத்)

**பாக்தாத் நகர் மீது இறுதிப் பெரும் தாக்குதல் ஒன்றிற்கு அமெரிக்கப் படைகள் தயாராகி வரும் அதேவேளை, பாக்தாத் நகரைச் சென்றடைவதற்கான வீதிகளில் அமெரிக்கப் படைகளுக்கும், ஈராக்கியத் துருப்புக்களுக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

ஈராக் தலைநகர் பாக்தாத் நகரை அண்மித்ததாக பல முனைகளில் முன்னேறியுள்ள அமெரிக்கப் படைகள் - பாக்தாத் நகரைச் சென்றடையும் அனைத்துப் பாதைகளையும் துண்டித்துள்ளதாகக் கூறிக் கொள்கின்றன. அமெரிக்கப் படையின் நூற்றுக் கணக்கான கவச வாகனங்களும், டாங்கிகளும் பாக்தாத்தை நோக்கிப் பெருமளவில் நகர்த்தப்பட்டும் உள்ளன.

இதேவேளை, பாக்தாத்திற்குள் உள்நுழைவதற்கான ரைகிறஸ் நதி மீதான பாலம் ஒன்றைக் கைப்பற்றுவதற்காக அமெரிக்கப்படைகள் முயன்றபோது அங்கு கடும் சண்டை மூண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு, புனித நகரான

(10ஆம் பக்கம் பார்க்க)



பாக்தாத் நகர வீதிகளில் ஈராக்கியப் படையினர் கையசைத்தவாறு செல்கின்றனர்.

## புலிகள்-தமிழ்க் கூட்டமைப்பினர் அடுத்த வார இறுதியில் சந்திப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திப்பொன்றுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கோரிக்கைக்கிணங்க அடுத்தவார இறுதியில் இந்தச்சந்திப்பு இடம்பெற இருக்கிறது. இதேவேளை கூட்டமைப்பினர் விரைவில் யாழ்ப்பாணம் செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சனாதிபதி சந்திரிகா நாடு திரும்பியதும் ஊடக அமைச்சுப் பொறுப்பை ஏற்பார்!

(கொழும்பு)

தற்போது இந்தியவிஜயத்தை மேற்கொண்டுள்ள சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடுதிரும்பியதும் ஊடக அமைச்சைக் கையேற்றுக்கொள்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 17ஆம் திகதிமுதல் சனாதிபதி இந்த அமைச்சுப் பொறுப்பைக் கைப்பற்றுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரச கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்கள் சனாதிபதியை கடுமையாக விமர்சித்து வருவதால் ஊடக அமைச்சுப் பொறுப்பை கைப்பற்றுமாறு சனாதிபதியின் ஆலோசகர்கள் வலியுறுத்திவருவதாகவும் கூறப்படுகிறது.

## பின்லாந்தில் புலிகளின் அரசியல் விவகாரக்குழு

(லண்டன்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் குழுவினர் தமது சுற்றுப்பயணத்தில் தற்போது பின்லாந்து சென்றுள்ளனர். தமது சுற்றுப்பயணத்தின் முதலாவது வாரத்தைப் பூர்த்தி செய்துள்ள இவர்கள் ஸ்கன்டினேவிய நாடுகளின் அரசியல் கட்டமைப்பு மற்றும் அரசாட்சி முறைகளை ஆராயும் முகமாக இந்தக் குழுவினர் தமது பயணத்தைத் தொடர்ந்துள்ளனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)



## கறுத்தப்பாலம் இராணுவ முகாமை பலப்படுத்த இராணுவம் நடவடிக்கை

மட்டக்களப்பு செங்கலடி பதுளை வீதியிலுள்ள கறுத்தப்பாலம் இராணுவ முகாமைப் பலப்படுத்தும் வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. இதனால் பொதுமக்களுக்குச் சொந்தமான பல காணிகள் இராணுவ முகாமாக மாறிக்கொண்டிருக்கின்றன. பொதுமக்களுக்கு சொந்தமான தென்னந்தோப்புக்களும் கால்நடை மேச்சல் தரைகளும் இராணுவ முகாமாக மாறிக்கொண்டிருப்பது பெரும் கவலையாகவுள்ளதாக பொதுமக்கள் மேலும்

(10ஆம் பக்கம் பார்க்க)





## ராஜீவ்காந்திக்கு யாழ்ப்பாணத்தில் சிலை அமைக்க இந்தியா விருப்பம்

(லண்டன்)

காலஞ்சென்ற முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு யாழ்ப்பாணத்தில் சிலை அமைப்பது குறித்து கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் நிருபம் சென் சிறிலங்கா அமைச்சர் ஒருவரைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இவ்விடயம் குறித்து குறிப்பிட்ட அமைச்சர் முடிவு எதுவும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சமாதான முயற்சிகளில் ஈடுபடும் நோர்வே மீது இந்தியா சீற்றம்

### இராஜதந்திர வட்டாரங்கள் தகவல்

இலங்கையின் சமாதான முயற்சிகளில் அனுசரணையாளராகப் பணிபுரியும் நோர்வே மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மீது இந்தியா சீற்றம் கொண்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையிலான உறவை சீர்குலைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிறிலங்காவிற்கான இந்தியத் தூதுவர் விசனம் கொண்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களை ஆதாரம் காட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(10ஆம் பக்கம் பார்க்க)

# பாலர்களின் கல்வி நிலையைவிட போஷாக்கில் விழிப்பாயிருக்க வேண்டும்

## மண்முனைப்பற்று சமூகசேவை உத்தியோகத்தர்

மண்முனைப்பற்று பிரதேசத்திலுள்ள பாலர் பாடசாலை பெற்றோர் ஆசிரிய ஒன்றுகூடலின் போது கிராமப்புற பாலர் பாடசாலைகளின் பாலர்களின் கல்வி நிலையைவிட அவர்களின் போஷாக்குப் பற்றியே விழிப்பாயிருக்க வேண்டுமென சமூக சேவை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

ஒரு குழந்தையின் வளர்ச்சி அதன் உணவிலேயே தங்கியுள்ளதால் போஷாக்கான உணவு வகைகளை குழந்தைகள் உண்ண பெற்றோர் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ஆனால் இது இப்பிரதேசத்திலுள்ள குடும்பங்களுக்குச் சாத்தியப்படாத ஒரு விடயமாகும்.

மிக வறுமைக் கோட்டிற்குள் வாழ்பவர்களாகையால் குழந்தைகளின் வளர்ச்சிக்கு தேவையான போஷாக்குள்ள உணவு கொடுப்பதற்கு போதிய வசதியற்றவர்களாவர்.

எனவே இப் பாடசாலைகளை பராமரித்துவரும் நிறுவனங்கள் மற்றும் சமூக சேவைகள் உதவி வழங்கும் தொண்டர் நிறுவனங்களோடு தொடர்பினை ஏற்படுத்தி தங்களின் குழந்தைகளுக்கு போஷாக்குள்ள உணவு வகைகளை பெற்றுத்தர முன்வர வேண்டுமென பெற்றோர் கேட்பதோடு, நகர்ப்புற பாடசாலைகளில் போஷாக்கான இலைக்கஞ்சி கௌப்பி, கடலை உணவு வகைகளை கொடுக்கும்போது, ஏன் இந்தப் பாடசாலைகளுக்கு கொடுக்க முடியாதென பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பாலர் பாடசாலைகளில் மாதாந்தம் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள்ஆகியோரால் ஒழுங்கான முறையில் தரவுகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அபிவிருத்திக்கு சுவீடன் மேலும் உதவி

இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகளுக்கென சுவீடன் அரசாங்கம் மேலும் உதவிகளை செய்ய முன்வந்துள்ளது. 2003-2005 ஆண்டுவரையான காலப்பகுதியில் அபிவிருத்திகளை மேற்கொள்ள மேற்படி அரசாங்கம் 30 இலட்சம் ரூபாவை வழங்கும். இதற்கான உடன்படிக்கை நாளை சிறிலங்கா நிதி அமைச்சின் அலுவலகத்தில் கைச்சாத்திடப்படும். கடந்த வாரம் ஆறுகோடி ரூபாவை சுவீடன் அரசாங்கம் இலங்கைக்கு வழங்கும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# க.பொ.த.(உ/த) பரீட்சை உத்தியோகத்தர்கள் கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

அண்மையில் நடைபெறவுள்ள க.பொ.த (உ/த) பரீட்சையில் உத்தியோகத்தர்களாகப் பணிபுரியவுள்ளவர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைபெறவுள்ளது. மேற்படி அறிவுறுத்தல் கூட்டம்பரீட்சை [illegible]ணைக்கள மேலதிக பரீட்சை [illegible]ணையாளரால் நடத்தப்படவுள்ளது. முல்லை மாவட்டத்தில் காலை 9.00 மணிக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் பிற்பகல் ஒரு மணிக்கும் நடைபெற இருப்பதால் அனைத்து உத்தியோகத்தர்களையும் தவறாது மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கிளி.வலய கல்விப்பணிப்பாளர் திரு.அரியரத்தினம் அவர்கள் கேட்டுள்ளார். (சோ,லோ)

# ஜே.வி.பி-பொ.ஐ.மு. ஒப்பந்தம் குறித்து இரு கட்சிகளும் கூடி ஆராய்வு

மக்கள் விடுதலை முன்னணிக்கும், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையில் கைச்சாத்திடப்படவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்த யோசனைகளுக்கு ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச இணக்கம் தெரிவித்துள்ளதோடு அவர் அனுப்பிவைத்துள்ள திருத்தங்கள் தொடர்பாக ஜே.வி.பி.யும் சுதந்திரக்கட்சியும் இணைந்து ஆராய்ந்ததாக ஜே.வி.பி.பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சனாதிபதி மாளிகையில் கடந்த வியாழன் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில் சனாதிபதி பங்குபற்றவில்லை. ஜே.வி.பி. சார்பாக செயலாளர் டில்வின்சில்வாவும் அனுரதிசாநாயக்க எம்.பி.யும் பங்கேற்றதோடு சுதந்திரக்கட்சி சார்பாக அதன் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவும் சரத் அமுனுகம எம்.பி.யும் கலந்து கொண்டனர்.

இதுவிடயத்தில் விரைவில் இரு தரப்பினருக்குமிடையில் இறுதிக்கட்டப்பேச்சு நடைபெறவுள்ளதோடு இம்மாத முடிவுக்குள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என ஜே.வி.பி. வட்டாரங்கள் கூறின.

## பிற்போடப்பட்டது

நாளை கிளிநொச்சி அரச செயலகத்தில் நடைபெறவிருந்த அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறமாட்டாது எனவும், மேற்படி கூட்டம் எதிர்வரும் 22.04.2003ஆம் திகதி நடைபெறும் எனவும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார். (சோ,லோ)

## அன்னை பூபதி நினைவு சிரமதானப்பணி

தியாகி அன்னை பூபதியின் 15 ஆம் ஆண்டு நினைவாக திருமுறிகண்டியில் அமைந்துள்ள ஆரம்பசுகாதார நிலையத்தில் நேற்று சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது.

கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் கிராம மக்களால் இச் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது

## கொடுப்பனவு

பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்களின் பங்குனி, சித்திரைமாதத்திற்கான மாதாந்த வேதனக் கொடுப்பனவு நாளை கிளிநொச்சி றம்மியா மைதிலி களஞ்சியத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதென பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன பொது முகாமையாளர் கே.சிவபாதசுந்தரம் தெரிவித்துள்ளார். (சோ)

# சமாதான ஒருங்கிணைப்பு கருத்தரங்கிற்கு கிளி.முல்லை.யிலிருந்து ஆறு மாணவர்கள்

(அலுவலக செய்தியாளர்)

சர்வோதய அமைப்பினரால் யுனிசெப் நிறுவனத்தின் ஆதரவுடன் அகில இலங்கை பாடசாலை மாணவர் மட்டத்தில் சமாதான ஒன்றிணைப்புக் கருத்தரங்கு நிகழ்வு அநுராதபுரம் சர்வோதய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையிலுள்ள சகல வறிய பாடசாலைகளில் இருந்து ஒவ்வொரு வலயத்தில் இருந்து மூன்று மாணவர்கள் வீதம் தெரிவு செய்யப்பெற்று இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் பொருட்டு நேற்று வலய ரீதியாக அநுராதபுரம் சர்வோதய நிலையத்திற்கு பயணமாகினர்.

இன்றும் நாளையும் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கிளி. வலயத்திலிருந்தும் துணுக்காய் வலயத்திலிருந்தும் மாணவர்கள் ஆறு பேர் கலந்து கொள்ளச் செல்கின்றனர். (சோ, லோ)

# கிளி. மாவட்ட பாடசாலைகளுக்கான மெய்வன்மைப் போட்டி இறுதிநாள் நேற்று

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் மெய்வல்லுனர் போட்டி கடந்த மூன்று நாட்களாக கிளிநொச்சி இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

மேற்படி போட்டியின் இறுதி நாள் நிகழ்வு நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு கிளி. வலய கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தலைமையில் நடை பெற்றது.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வன்னி கல்விக்கழகப் பொறுப்பாளர் ஞானம் ஆகியோர் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர்.

இறுதிநாள் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை கிளி. வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ம.பத்மநாதன், திருமதி.மார்க்கண்டு ஆகியோர் ஏற்றிவைக்க வன்னி கல்விக்கழகப் பொறுப்பாளர் ஞானம் தமிழீழ தேசியக்கொடியினை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து வலயக் கொடியினை வலயக் கல்விப் பணிப்பாளரும், கோட்டக் கொடியினை கோட்டக்கல்விப் பணிப்பாளரும் ஏற்றி வைத்தனர். ஒலிம்பிக்கொடியினை உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கா.ஜெயசீலன் ஏற்றி வைத்தார். ஒலிம்பிக் தீபத்தினை பிரதிக் கல்விப்பணிப்பாளர் மு.சண்முகராசா ஏற்றிவைத்தார்.

பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பினையடுத்து விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

அடுத்து வெற்றியீட்டிய மாணவர்களுக்கு விருந்தினர்கள் பரிசில்கள், கேடயம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ. லோ)





## பேருந்து நேர மாற்றம்

முகமாலையில் இருந்து புறப்பட்டு புதுக்குடியிருப்பு வந்தடைந்து பின்பு மந்துவில் ஊடாக முல்லைத்தீவு வந்தடைந்து மாலை 06.00 மணிக்கு செம்மலை புறப்பட்ட பேருந்தானது மக்களின் தேவையை கருத்திற்கொண்டு கடந்த முதலாம் திகதி தொடக்கம் பி.ப 05.30 மணிக்கு முல்லைத்தீவில் இருந்து புறப்பட்டு செம்மலை செல்கின்றது என்பதை தமிழீழ போக்குவரவுக் கழக முல்லைச்சாலை முகாமையாளர் தெரிவித்தார். (20)

மங்களகரமான திறப்பு விழா

இதுவரை காலமும் நியூ ராஜன் சலூன் என்னும் பெயரில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் புதிய பெயரில் மெருகூட்டப்பட்ட

ஜோதிகை அழககம்

07.04.2003 திங்கள் இன்று பகல் 12.30 மணிக்கு சம்பால் திறந்து வைக்கப்படவுள்ளதை அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

டிப்போ வீதி, கிளிநொச்சி. (3067)

உரிமையாளர், சூரியகுமார் (சூரி)

வட்டக்கச்சி திட்ட உபகுழு

அறிவித்தல்

2003 சிறு போக நெற் செய்கைக்கான நீர்வரி அறவீடு 07.04.2003 - 11.04.2003 வரையும் இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்தில் நடைபெறும். இந்த நாட்களுக்குள் சகல விவசாயிகளும் வரி செலுத்தி பங்குகள் அணைக்கப்படல் வேண்டும். பங்குகள் அணைக்காத காணிகளுக்கு 12ஆம் திகதி திட்ட உப குழுவினரால் பங்குகள் அணைக்கப்படும். நீர் விநியோகம் 15.04.2003 ஆரம்பமாகும். சகல விவசாயிகளும் வாய்க்கால்களினை துப்புரவு செய்து சீரான நீர் விநியோகத்திற்கு ஒத்துழைப்பு வழங்கவும்.

திட்ட உபகுழு,
வட்டக்கச்சி.

(3056)

# பாக்தாத்திற்குத் தெற்கே கடும் மோதல்; டாங்கிகள் பெருமளவில் முன்நகர்வு!

## - இரவுநேர நடமாட்டத்திற்கு தடைவிதிப்பு

**அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினருக்கும் ஈராக்கிய படையினருக்கும் இடையில் நேற்று 18ஆவது நாளாகக் கடுமையான மோதல்கள் இடம்பெற்றுள்ளன. கூட்டுப்படையினர் தொடர்ந்து முன்னேறி வருவதாகத் தெரிவிக்கப்படும் நிலையில் களமுனைகளில் சில பின்னடைவுகளை அவை சந்தித்திருப்பதாக அறிவிக்கப் படுகிறது.**


கம்பாலா, பஸ்ரா மற்றும் பாக்தாத்தின் தென்புறப் பகுதிகளில் நேற்றும் கடுமையான மோதல்கள் இரு தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்றுள்ளன. அமெரிக்க டாங்கிகள் பெருமளவில் முன்னேறிச் செல்வதாக பாக்தாத்தின் தெற்குப் பகுதிகளில் கடும் சண்டை நடப்பதாகவும் அமெரிக்கப் படைத்தரப்பு கூறுகின்றது.

அத்தோடு, பாக்தாத்தைவிட்டு கூட்டம் கூட்டமாக மக்கள் வெளியேறிச் சென்றுகொண்டிருப்பதாகவும் அது வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதைவிட பாக்தாத்திற்குள்ளும் தமது படைகள் பிரவேசித்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இதனை முற்றாக மறுத்துள்ள ஈராக் சதாம், சர்வதேச விமான நிலையம் தற்போது தமது பூரண கட்டுப்பாட்டில் இருப்பதாக அறிவித்துள்ளார். இந்தச் சண்டையில் நூற்றுக்கணக்கான அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டிருப்பதாகவும் ஈராக் தெரிவித்துள்ளது. மேற்படி விமானநிலையத்தை நோக்கி ஈராக்கிய படையினர் கடுமையாக ஆட்லறித் தாக்குதல்களையும், ஏவுகணைத் தாக்குதல்களையும் நடத்தியதைப் பாக்தாத்திலுள்ள வெளிநாட்டு செய்தியாளர்கள் உறுதிசெய்துள்ளனர். அத்துடன் பாக்தாத் நகருக்குள் அமெரிக்க படையினர் இன்னமும் நுழைந்து விடவில்லை என்பதை ஈராக் தகவல் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பாக்தாத் நகர்மீது நேற்றும் கடுமையான விமான மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இது இவ்வாறிருக்க நேற்று மாலை ஆறுமணி முதல் இன்று காலை 6 மணிவரையான 12 மணிநேரத்திற்கு மக்கள் எவரையும் பாக்தாத் வீதிகளில் நடமாட வேண்டாம் என ஈராக்கிய அரசு அறிவிப்புச் செய்திருந்தது.




பாக்தாத் நகர வீதியில் ஈராக்கிய படையினரால் கனரக ஆயுதம் எடுத்துச்செல்லப்படுகிறது.



மேற்குக் கரை கெப்ரோன் நகரில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் வேளை இஸ்ரேலிய படைவீரர் ஒருவர் பலஸ்தீனப் பொதுமகன்மீது துப்பாக்கியை நீட்டி அச்சுறுத்துகிறார்.

## 7 ஈராக்கியர் பலி!

பாக்தாத்திற்கு தெற்கே நேற்று லொறியொன்றில் சென்ற பொதுமக்கள் மீது அமெரிக்கப் படையினர் நடத்திய தாக்குதலில் 3 சிறுவர்கள் உட்பட ஏழுபேர் பலியாகினர். தற்கொலைப் படையினர் என நினைத்தே இந்தத் தாக்குதலை நடத்தியதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.



வட ஈராக்கின் மலைப்பகுதியில் அமெரிக்க விமானத் தாக்குதலொன்றில் எழும் புகைமண்டலம்.

## ஈராக் போருக்கெதிராக அணி திரண்டு அமெரிக்க மக்கள் தொடர் ஆர்ப்பாட்டம்

(வாஷிங்டன்)

ஈராக்கில் அமெரிக்க கூட்டுப் படைகள் நடத்திவரும் தாக்குதல்களைக் கண்டித்து அமெரிக்க நகரங்களில் தொடர்ந்தும் ஆர்பாட்டங்கள் நடந்து வருகின்றன. கலிபோர்னியா மாநிலத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன் சனாதிபதி புஷ் மீது அரசியல் உரிமை மீறல் குற்றச்சாட்டு கொண்டுவரவேண்டும் என்று கோசமெழுப்பினர்.

தவறான ஒரு யுத்தத்திற்கு அப்பாவி மக்களின் சொத்துக்களை வீணாக்குவது சட்டவிரோதமானது என்று கலிபோர்னியா மாநிலத்தின் சனநாயக கட்சித் தலைவர் டாபறாமீக் தெரிவித்துள்ளார்.

சென்றவருடம் ஈராக்கிற்கு எதிராக யுத்தம் நடத்தப்போவதை ஆட்சேபித்து பாராளுமன்றத்தில் வாக்களித்த ஒரே ஒரு பிரதிநிதி இவராவார். சமாதானம் என்பது தேசபக்தியாகும் என்று அவர் குறிப்பிட்டார். அதேசமயம் அமெரிக்க நகரங்கள் பலவற்றிலும் ஈராக் மீதான யுத்தத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன.

ஒக்லாண்டில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றியவர்கள் சனாதிபதி புஷ் சனநாயகத்திற்கு எதிராகச் செயற்படுகின்றார் எனக் கோஷமிட்டனர்.

## மாணவிகள் போராட்டம்

(சென்னை)

சென்னை ராணிமேரி கல்லூரி வளாகத்தில் தமிழ்நாடு அரசின் புதிய தலைமை அலுவலகம் அமைப்பதற்கு அரசு எடுத்த முடிவை எதிர்த்து அக்கல்லூரி மாணவிகள் இரண்டாவது நாளாக நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவிகளின் போராட்டம் தொடர்வதால் இருவார காலத்திற்கு கல்லூரி மூடப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

## சிறைச்சாலை மீது தாக்குதல்; கொண்டூராஸில் 60 பேர் பலி!

கொண்டூராஸ் நாட்டில் சிறைச்சாலை ஒன்றில் இடம்பெற்ற தாக்குதலில் 60 பேர் கொல்லப்பட்டுள்ளனர். சிறைமீது ஆயுதம் தாங்கிய இளைஞர் குழுவொன்று நேற்று முன்தினம் இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருக்கிறது.

மாறாஎயிட்டின் என்ற குழு துப்பாக்கிகள் கைவாள்கள் என்பவற்றோடு துறைமுக நகரான லாசிபாவில் இருக்கின்ற சிறைமீது தாக்குதலை மேற்கொண்டதாக அங்குள்ள பொலிசார் தெரிவித்துள்ளனர். தலைநகருக்கு 115 மைல்கள் தொலைவில் உள்ள இந்த சிறைச்சாலையில் தாக்குதல் இடம்பெற்ற போது550 கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். கொல்லப்பட்டவர்களைவிட ஏனையகைதிகள் தப்பியோடிவிட்டார்கள்



யூப்பிரற்றிஸ் நதிக்கு அருகாமையில் அமெரிக்காவின் அவசர சிகிச்சை வாகனம் சென்றுகொண்டு இருக்கையில் ஈராக் பெண் ஒருவர் தண்ணீர் தூக்கிச் செல்லும்காட்சி.

## அக்னி — 3 நெடுந்தொலைவு ஏவுகணை ஆண்டிறுதிக்குள் இந்தியா பரீட்சிக்கும்!

### - ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தகவல்

(புதுடில்லி)

அணுவாயுதங்களை எடுத்துச் செல்லக்கூடிய நீண்டதொலைவு 'அக்னி'-3 ஏவுகணையை இந்தியா உருவாக்கி வருகிறது. இத்தகவலைப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பேர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

பி.ரி.ஐ. செய்தி ஸ்தாபனத்திற்கு அவர் தெரிவிக்கையில்; தரையிலிருந்து தரையிலக்கை நோக்கிப் பாயக்கூடிய இந்த ஏவுகணை இந்த ஆண்டிலேயே சோதித்துப் பார்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறினார்.

இந்த ஏவுகணை இரண்டாயிரம் கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஒரு இலக்கைத்தாக்கும் திறன் கொண்டதாக அமையும் என்றும் அவர் கூறினார்.

இந்தியா ஏற்கனவே அக்னி-1, அக்னி-2 ஏவுகணைகளைப் பரிசோதித்துள்ளது. அத்தோடு இந்தியா இதுவரை பரிசோதித்த ஏவுகணைகள் 700 கிலோமீற்றர் தூரம் சென்று தாக்கும் திறன் கொண்டதாகவே அமைந்தது என்றும் குறிப்பிட்டார்.

## ஈராக்கின் தென்பகுதியில் 200 சடலங்கள் மீட்பு

ஈராக்கின் தென்பகுதியில் 200 சடலங்களை பிரிட்டிஷ் படையினர் மீட்டுள்ளனர்.

அழுகிய நிலையில் காணப்பட்ட இச்சடலங்களை பிரித்தானியப்படைகள் களஞ்சியசாலை ஒன்றில் இருந்து மீட்டெடுத்திருப்பதாக தெரிவித்துள்ளனர்.

பிரித்தானியப் படையோடு இணைந்து செய்திகளை தரும் பத்திரிகையாளர்களும் இந்தத் தகவல்களை உறுதி செய்துள்ளனர். மீட்கப்பட்ட சடலங்கள் தவிர மேலும் அதிகமான மனித எலும்புக் கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன. அராபிய செய்தி ஊடகம் ஒன்று ஈராக்கிய அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி வெளியிட்ட தகவலின்படி அழுகிய நிலையில் மீட்கப்பட்ட சடலங்கள் யாவும் தற்போது இடம்பெற்றுவரும் யுத்தத்தின் போது கொல்லப்பட்ட ஈராக்கிய படையினருடையதாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொல்லப்பட்ட வீரர்களின் சடலங்களை மீட்டெடுப்பதற்கு கூட்டுப்படை அனுமதியளிக்கவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

## -100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ்-

# கிரானில் அமைக்கப்படும் வீட்டுத்திட்டம்

# வருடமொன்றாகியும் நிறைவு பெறவில்லை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழான வீட்டுத்திட்டம் ஒரு வருடமாகியும் இதுவரையில் நிறைவுபெறவில்லை என பொது மக்கள் கவலை தெரிவித்தனர்.



கடந்த 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி வீட்டுத்திட்டம் சிங்களப் பகுதி மக்களுக்கு உகணைப் பகுதியிலும், முஸ்லிம் மக்களுக்கு திருகோண மலையிலும், தமிழ் மக்களுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பகுதியிலும் ஆரம்பிக்கப்பட்டது.

100 நாட்களுக்குள் கட்டி முடிக்கப்பட வேண்டிய மேற்படி வீட்டுத்திட்டம் இதுவரையில் வீட்டு வேலைகள் நிறைவுபெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், வீட்டுத்திட்டம் அமைக்கப்பட்ட பகுதியில் மின்சார விநியோக வேலை நிறைவு பெறாமல் இருக்கும் மேற்படி வீட்டுத்திட்டம் 65,000 ரூபாய் பெறு மதியானது.

இதேவேளை வீடுகளுக்கு உரிய மக்கள் சிறிய குடிசைகள் அமைத்து வாழ்ந்துவருவதோடு மிகவும் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்பவர்கள் யுத்த சூழ்நிலையில் படையினரின் செல்வீச்சில் பாதிப்படைந்த பேர்லாவெளி, மீயான்குளம், தரவை போன்ற பல பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கே மேற்படி வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இருந்தும் வீட்டுத்திட்டம் நிறைவு பெறாமல் இருப்பது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# இலவசப் போஷாக்கு உணவு மே முதல் வழங்கப்படும்

(அலுவலக செய்தியாளர்)

வட-கிழக்கு மாகாணத்தின் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு இலவச போசாக்கு உணவு வழங்கும் திட்டத்தை உலக உணவுத்திட்டம் எதிர்வரும் மே மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இருபத்திநான்கு கல்வி வலயங்களில் முதற் கட்டமாக வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, கல்குடா ஆகிய நான்கு வலயங்களில் அமுல்படுத்தப்படும்.

இதன் மூலம் தரம்-1 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்களுக்கு இலவச போசாக்கு உணவு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சோ)

# வீரவணக்கக் கூட்டமும் நடுகல் திரைநீக்கமும்

கடந்த 22-03-2003 அன்று தவறுதலான வெடிவிபத்தின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கடற்புலி மேஜர் சாருமதி (உமாதேவி செல்வநாயகம், தனங்கிளப்பு,சாவ[illegible]ரி. த.மு- பாலியாறு, வெ[illegible]குளம்) என்னும் மாவீரரின் [illegible]நவப் படம் நாளை 08 ஆம் [illegible] அவரது தற்காலிக இ[illegible]ல் வைக்கப்பட்டு, மறுநாள் [illegible] வெள்ளாங்குளம் முன்பள்ளி மண்டபத்தில் வீரவணக்கக் கூட்டத்திற்காக வைக்கப்படும்.

அங்கிருந்து அலங்கரிக்கப் பட்ட ஊர்தியில் கொடிகாமம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு கொடிகாமம் பொது மண்டபத்தில் இறுதி வீரவணக்க நிகழ்வுக்காக வைக்கப்பட்டு, நிகழ்வுகள் இடம்பெறும். பின்னர் மாலை 4.00 மணியளவில் கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் பூரண படைத்துறை மரியாதைகளுடன் புனித நடுகல் திரைநீக்கம் செய்து வைக்கப்படும்.

# பசுந்தளிர் அறிவியல் வினாடி வினாப் போட்டி

(ஒட்டுசுட்டான்)

விவசாயிகளுக்கான பசுந்தளிர் அறிவியல் விவசாய வினாடி விளாப் போட்டி-02 கடந்த 02ம் திகதி மாலை 3.00 மணியளவில் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் மாவட்ட விவசாயத் திணைக்களமும் இணைந்து நடாத்தும் இப்போட்டிக்கு பிரதேச ரீதியாக ஐந்து விவசாயிகள் வீதம் தெரிவு செய்யப்பட்டு பின்னர் மாவட்டரீதியாக நடைபெற்று பரிசில்களும் வழங்கப் படும்.

இப்போட்டியில் 5 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்நிகழ்வு முல்லை மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது. இதேவேளை வினாடிவினாப் போட்டி -01 ஒட்டுசுட்டான் பகுதியில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)


கண்ணிவெடி

விழிப்புணர்வு வாரம்

01-07.04.2003

கண்ணிவெடிகளும் வெடி பொருட்களும் உங்கள் உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றன.

அவதானமாயிருந்து ஆபத்தினைத் தவிருங்கள்.

யுனிசெப்-வெண்புறா நிறுவனம்

(சி.8043)





நடத்துநர் பணி நேர்முகத் தேர்வு

தமிழீழப் போக்குவரவுக் கழகம்

தமிழீழப் போக்குவரவுக்கழக நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத் தேர்வு 09 – 04 – 2003, 10 – 04 – 2003ஆம் நாள் புதன், வியாழன் காலை 10.00 மணி தொடக்கம் பகல் 03.00 மணிவரை தமிழீழப் போக்கு வரவுக் கழகம் – பேருந்துப்பகுதி – புதுக்குடியிருப்பு பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித்தகைமை, அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் வகையில் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு :

09-04-2003, 10-04-2003 ஆம் நாள் புதன், வியாழன் ஆகும். சனி, ஞாயிறு என 04-04-2003, 05-04-2003 நாளேடுகளில் நாளிட்டது தவறானதாகும்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக்கழகம்,

(சி.8058)

# கிளிநொச்சி மாவட்ட சுகாதார நிலைமைகளை அமைச்சின் உயர் அதிகாரிகள் குழு பார்வை!

## - அதிகாரிகளைச் சந்தித்தும் பேச்சு

(அலுவலக செய்தியாளர்)

**சிறிலங்கா சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவினர் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட சுகாதார நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் அருண் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து இங்குள்ள நிலைமைகள் குறித்துக் கேட்டறிந்து கொண்டதுடன் சில உறுதிமொழிகளையும் வழங்கினர்.**

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் ஜெயதிலக தலைமையிலான இந்தக் குழுவில் சுகாதார அமைச்சின் உதவிச் செயலாளர் டாக்டர் ஜெகநாதன், வசந்த ஜெயவர்த்தன, வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் எம்.எஸ். ரட்ணாயக்கா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

மேலும், கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம், மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி ஆகியோருடன் இந்த உயர் அதிகாரிகள் குழுவினர் கிளி நொச்சி மாவட்ட முன்னைய வைத்தியசாலை வளாகத்தைப் பார்வையிட்டனர்.

அத்தோடு, அக்கராயனிலுள்ள மாவட்ட வைத்தியசாலை, பளையில் இயங்கும் கட்டம்-I வைத்தியசாலை, கிளிநொச்சி கட்டம்-I வைத்தியசாலை என்பனவற்றையும் இவர்கள் பார்வையிட்டதுடன் நீண்ட காலமாக வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்களையும் பணியாளர்களையும் சந்தித்து கலந்துரையாடினர்.

மேலும் விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவினரால் நடைமுறைப்படுத்தப்படும் திலீபன் மருத்துவமனை சேவையினையும் இவர்கள் பாராட்டியதுடன் வியப்படைவதாகவும் கூறினர்.



படம் சோதி

கிளிநொச்சி வைத்தியசாலை வளாகத்தைப் பார்வையிடுகையில்

மேலும் இவர்கள் தெரிவிக்கையில் இங்குள்ள நிலைமைகளை நேரில் பார்க்கும்போது மிகவும் கவலை அடைவதாகவும், இவ் விடயங்களை சுகாதார அமைச்சிடம் தெரியப்படுத்தி முக்கியமான வைத்தியசாலை உபகரணங்களை வழங்க ஆவன செய்வதாகவும் தெரிவித்தனர்.

அத்தோடு, இங்கு வரவிருப்பம் தெரிவிக்கும் வைத்திய அதிகாரிகளுக்கு உடனடியாக இடமாற்றம் செய்ய தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினர்.

மேலும் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடும் போது தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் அருண் கூறுகையில், உங்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட இரண்டு நாள் மருத்துவ சேவைகள் மக்களுக்குப் பெரிதும் பயன் பட்டன எனவும், இதையிட்டு மக்களும் நாங்களும் சந்தோசம் அடைவ தாகவும் தொடர்ந்தும் மக்கள் சுகாதார பிரச்சினைகளற்று இருப்பதற்கு இங்குள்ள வைத்தியசாலைகளைப் புனரமைத்து வைத்தியர்கள் உட்பட முக்கிய ஆளணிகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை உடனடியாகவும் படிப்படியாகவும் வழங்க ஆவன செய்ய நடவடிக்கை எடுக்குமாறுகேட்டுள்ளார். (அ.சோ)

# கிளி.வைத்தியசாலைக் கட்டடங்களை புனரமைக்க 20 மில்லியன் நிதியுதவி

## - சிறில. சுகாதார அமைச்சின் செயலாளர் உறுதி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட முன்னைய வைத்தியசாலையின் கட்டடங்களைத் திருத்தி அமைப்பதற்கு இருபது மில்லியன் ரூபாவினை உடன் வழங்க வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு மத்திய சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

கிளி. மாவட்ட அரசஅதிபர் தி.இராசநாயகத்தின் வேண்டுகோளுக்கிணங்க சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் குழு இந்த வைத்தியசாலை வளாகத்தைப் பார்வையிட்டபோது கிளி. அரச அதிபர், கிளி.மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி ஆகியோர் மேற்படி வைத்தியசாலை உடனடியாக புனரமைக்க வேண்டிய அவசியத்தையும், நோயாளர்கள் வைத்திய சேவை பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதனையும் எடுத்துக் கூறினர்.

வைத்தியசாலை வளாகத்தினைச் சுற்றிப்பார்வையிட்ட அமைச்சு குழுவினர் மேற்படி வைத்தியசாலையின் உடனடிப் புனரமைப்புப் பணிக் கென 20 மில்லியன் ரூபா வழங்கு வதெனவும் மற்றும் வைத்திய அதிகாரிகளின் விடுதிகளினைப் புனரமைப்பதற்கான நிதியுதவி வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தனர். (சோ)



கிளிநொச்சி வட்டக்கச்சியில் பொருண்மிய மதியுரையக ஜேர்மன் கிளையால் நிறுவப்பட்ட மின் உற்பத்தி நிலைய ஆரம்ப விழாவையும், காற்றாலையின் ஒரு பகுதியையும் காண்க. (சோதி)

# பொது வைத்தியசாலை பெயர்ப் பலகை திரைநீக்கம்

வவுனியா பொது வைத்தியசாலைக்கான பெயர்ப் பலகை எதிர்வரும் 24ம் திகதி திரைநீக்கம் செய்யப்படவுள்ளது.

வவுனியா வைத்தியசாலை பொதுவைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டதையடுத்து, இவ் வைத்தியசாலைக்கான பெயர்ப் பலகையினைத் திரைநீக்கம் செய்வது தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

# சமைத்த உணவு வழங்கல்

(ஒட்டுசுட்டான்)

வவுனியாவில் இருந்து வந்த 24 குடும்பங்களைச் சேர்ந்த 84 அங்கத்தவர்களுக்கு கடந்த 28ஆம் திகதி முதல் முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் மூன்று நாட்களுக்குச் சமைத்த உணவினை வழங்கியுள்ளது. (05)

# தையல் இயந்திரங்கள் அன்பளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் சமுதாய முன்னேற்ற நிலையப் பெண்கள் பயிற்சி வேலைத் திட்டத்தினருக்கு தையல் இயந்திரங்கள் அன்பளிப்புச் செய்யப் பட்டன.

பெண்களின் தையல் பயிற்சி வேலைத் திட்டத்தினை துரிதப் படுத்தும் வகையில் கிளி. மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரால் முதற் கட்டமாக ஐந்து தையல் இயந்திரங்கள் அன்பளிப்புச் செய்யப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கண்டெடுப்பு

V. இளங்குமணன் என்பவரது அ.அட்டை இல: 09715 கிளிநொச்சியில் கண்டெடுக்கப்பட்டு பகலவன் முகாமில் (நந்தவனத்திற்கு அருகாமை) உள்ளது. இதை உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

# கலந்துரையாடல்

கால் நடைவளர்ப்போர் கூ.சங்கங்களுக்கான கலந்துரையாடல் நாளை எட்டாம்திகதி காலை 10 மணிக்கு நடைபெற இருப்பதால் சகல நிர்வாக உறுப்பினர்களையும் சங்க அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு முல்லை மாவட்ட த.பொ.மே.நி. கேட்டுக் கொள்கின்றது. (05)

## – உப தபாலகங்கள் இயங்கவில்லை –

# பலமுறை முறையிட்டும் பயனில்லையெனக் கவலை!

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்து ஒருவருடம் முடிவடைந்தும் இன்னும் ஆழியவளை, முள்ளியான் ஆகிய இரு உப தபால் அலுவலகங்கள் இயங்கவில்லை. இது சம்பந்தமாக யாழ். அரச அதிபர் மற்றும் அஞ்சல் திணைக்களங்கள் போன்றவற்றுக்கு வடமராட்சி கிழக்கு புனரமைப்புக்குழு மற்றும் இங்குள்ள பொது அமைப்புக்கள் பல முறை கடிதங்கள், மகஜர்கள், அனுப்பியும் இன்னும் எதுவித பிரயோசனமும் இல்லாததினால் இப்பகுதி மக்கள் கவலையடைந்துள்ளனர்.

தற்போது தாளையடி உப தபால் அலுவலகத்திலிருந்து ஆழியவளை வரை தபால் விநியோகம் மட்டும் நடைபெறுகின்றது. வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, முள்ளியான் கேவில், போக்கறப்பு, நித்திய வெட்டை ஆகிய பகுதிகளுக்கான தபால்களை தாளையடி உபதபால் அலுவலகத்தில் தான் அப்பகுதி மக்கள் வந்து பெற்றுச்செல்ல வேண்டும்.

இவற்றைவிட ஆழியவளை, கேவில், முள்ளியான், கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, நித்தியவெட்டை போன்ற இடங்களிலிருந்து பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறும் முதியோர்கள் தாளையடியில்தான் வந்து பெற்றுச்செல்லவேண்டிய நிலையுள்ளது. (11)

# சிறுபோக பயிர்செய்கைக் கூட்டம்

முள்ளியவளைப் பிரதேசத்தில் உள்ள மதவாளன் சிங்கன்குளம், கணுக்கேணிக்குளம் ஆகிய இரு குளங்களின் கீழ் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வது தொடர்பான தீர்மானக் கூட்டம் அண்மையில் முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்றது.

கணுக்கேணிக்குளத்தின் கீழ் 454 ஏக்கர் சிறுபோக நெற்செய்கையும், மதவாளன் சிங்கன் குளத்தின் கீழ் 200 ஏக்கர் நெற்செய்கையும் மேற்கொள்ளப் படவேண்டுமென தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முள்ளியவளைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.சரவணன், மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் இ.மாறன், கரைத்துறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் செ.காசிப்பிள்ளை, முள்ளியவளைப் பிரதேச பொ.மே.நி. இணைப்பாளர் இறமேஸ், முத்துஐயன் கட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளர் சண்முகராசா ஆகியோர் இங்கு கருத்துரை வழங்கினர்.

இக்கூட்டத்தில் நியாப் திட்ட உத்தியோகத்தர்கள் உட்பட முல்லை மாவட்ட விவசாய ஆணையாளர், கிராமசேவையாளர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஆ)

# உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாண சபை.

# வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD)

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது**

**"ஆஅவ" கடன் இல. 1846 - SRI(SF)**

# கேள்வி அறிவித்தல் – 15

01. வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ஆஅவ) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் கருத்திட்டப் பணிப்பாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கூறுவிலையிடுவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கூறுவிலைகளைத் தற்போது கோருகின்றார்.

| தொ. இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கூறுவிலைப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | VA/NECORD/HS/02 | நெடுங்கேணி சுற்றயல் கூறு வைத்தியசாலை புனர்நிர்மாணம், வவுனியா மாவட்டம் - தொகுதி 01 | M 6 | 59,000/= |
| | | நெடுங்கேணி சுற்றயல் கூறு வைத்தியசாலை புனர்நிர்மாணம், வவுனியா மாவட்டம் - தொகுதி 02 | M 6 | 54,000/= |
| | | நெடுங்கேணி சுற்றயல் கூறு வைத்தியசாலை புனர்நிர்மாணம், வவுனியா மாவட்டம் - தொகுதி 03 | M 6 | 62,000/= |
| 02 | MN/NECORD/HS/06 | அடம்பன் மாவட்ட வைத்தியசாலை புனர்நிர்மாணம், மன்னார் மாவட்டம் - தொகுதி 01 | M 6 | 63,000/= |
| | | அடம்பன் மாவட்ட வைத்தியசாலை புனர்நிர்மாணம், மன்னார் மாவட்டம் - தொகுதி 02 | M 6 | 58,000/= |
| | | அடம்பன் மாவட்ட வைத்தியசாலை புனர்நிர்மாணம், மன்னார் மாவட்டம் - தொகுதி 03 | M 7 | 44,000/= |
| 03 | VA/NECORD/IR/01 | பாவற்குள நீர்ப்பாசனக் கால்வாய்களின் புனருத்தாரணம், வவுனியா மாவட்டம் - தொகுதி 01 | M 6 | 51,000/= |
| | | பாவற்குள நீர்ப்பாசனக் கால்வாய்களின் புனருத்தாரணம், வவுனியா மாவட்டம் - தொகுதி 02 | M 6 | 55,000/= |
| | | பாவற்குள நீர்ப்பாசனக் கால்வாய்களின் புனருத்தாரணம், வவுனியா மாவட்டம் - தொகுதி 03 | M 6 | 64,000/= |
| | | வவுனியா மாவட்ட-பாவற்குள பிரிவிற்கான நீர்ப்பாசனக் கால்வாய்களின் புனருத்தாரணம் - தொகுதி 04 | M 6 | 70,000/= |
| 04 | MU/NECORD/RD/01 | வற்றாப்பளை புதுக்குடியிருப்பு வீதியின் 8.7 கிலோமீற்றரில் அமைந்துள்ள பாலம் நிர்மாணம், முல்லைத்தீவு மாவட்டம் - தொகுதி 01 | M 7 | 33,000/= |
| | | வற்றாப்பளை புதுக்குடியிருப்பு வீதியின் 8.7 கிலோமீற்றரில் அமைந்துள்ள பாலம் நிர்மாணம், முல்லைத்தீவு மாவட்டம் - தொகுதி 02 | M 7 | 32,000/= |
| | | வற்றாப்பளை புதுக்குடியிருப்பு வீதியின் 8.7 கிலோமீற்றரில் அமைந்துள்ள பாலம் நிர்மாணம், முல்லைத்தீவு மாவட்டம் - தொகுதி 03 | M 7 | 22,000/= |
| 05 | GF/NECORD/RD/01 | செம்பியன்பற்று கட்டைக்காடு மீனவ வீதி 19.19 கி.மீ தூரம் புனருத்தாரணம், யாழ்ப்பாண மாவட்டம் - தொகுதி 01 | M 6 | 53,000/= |
| | | செம்பியன்பற்று கட்டைக்காடு மீனவ வீதி 19.19 கி.மீ தூரம் புனருத்தாரணம், யாழ்ப்பாண மாவட்டம் - தொகுதி 02 | M 7 | 48,000/= |
| | | செம்பியன்பற்று கட்டைக்காடு மீனவ வீதி 19.19 கி.மீ தூரம் புனருத்தாரணம், யாழ்ப்பாண மாவட்டம் - தொகுதி 03 | M 7 | 43,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
    i. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மான ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
    ii. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ("ICTAD" டுடன் மேற்படி M7 க்கு பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) இருக்க வேண்டும்.
    iii. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும், இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கூறுவிலையிடுவோர் வேண்டப்படுகின்றனர்.
    iv. இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கூறுவிலை ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.
    v. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
    vi. கூறுவிலை ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

04. இதன் தொடர்பாக பந்தி 2 இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கூறுவிலையிட முடியும். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பானதொரு கூறுவிலையாக அமைய வேண்டும். ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை வடக்கு - கிழக்கு சமூக புனருத்தாரண அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) கீழ் தற்பொழுது செயற்படுத்திக் கொண்டிருக்கும் ஒப்பந்த வேலைகள் உட்பட மூன்றாக இருக்கும்.

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கூறுவிலையிடுவோர் மேலும் தகவலை கூறுவிலைப் படிவத்தில் பெறமுடியும் என்பதுடன், கூறுவிலை ஆவணங்களை திட்டப்பணிப்பாளர், வடக்கு - கிழக்கு சமூக மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் (NECORD), 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்ற விலாசத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 026-27434-6, பக்ஸ்: 026-27401, ஈமெயில்: necord@sltnet.lk.

06. கூறுவிலை ஆவணத் தொகுதிகளை 07-04-2003 இலிருந்து 24-04-2003 வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை வேலைநாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத ரூபா 1000/=ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

07. கூறுவிலையிடுவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் இரு பொறி வைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட [illegible] கூறுவிலை கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

08. பொறிவைத்த கூறுவிலைகள் தலைவர், திட்ட கேள்விச் சபை, NECORD, 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்று விலாசமிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் 30-04-2003 மாலை 2.00 மணிக்கு முன்பாக அனுப்பப்படவேண்டும் அல்லது இதே விலாசத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். இதன் பின்னர் உடனடியாக கூறுவிலைகள் திறக்கப்படும். கூறுவிலை திறக்கப்படும் நேரத்தில் கூறுவிலையிடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.

09. முன்கூட்டியே கூறுவிலை கூட்டமொன்று, இதன் தொடர்பாக பந்தி 5 இல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் 22-04-2003 அன்று மாலை 2.00 மணிக்கு நடைபெறும்.

10. கூறுவிலைகளின் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கூறுவிலையிடுவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாக விளங்கமாட்டனர்.

த.லங்காநேசன்,
வடக்கு கிழக்கு சமுதாய புனருத்தாரண அபிவிருத்தித் திட்டக் கேள்விச்சபைத் தலைவர்.
140,மின்சார நிலையவீதி, திருகோணமலை.

(சி.8057)

# பெண்களுக்குத் தொழிற்பயிற்சி வழங்கி



வன்னிப் பெருநிலப்பரப்பில் போரினால் பாதிக்கப்பட்டு தொழில்வாய்ப்பின்றி அல்லலுறும் இளம்பெண்களுக்குத் தொழிற் பயிற்சி வழங்கி, அவர்களைச் சுயதொழில் முயற்சியில் ஈடுபடுத்தும் நடவடிக்கையில் கடந்த இருவருடங்களாக சமுதாய முன்னேற்ற நிலைய பெண்கள் பயிற்சி வேலைத் திட்டத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

கொடிய போர் அனர்த்தங்களின் விளைவாக வறுமையிலும் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மேற்படி இளம்பெண்களை இனங்கண்டு அவர்களை சுயதொழில் முயற்சியில் ஈடுபடுத்தும் வகையில் துறைசார் பூரண தொழிற் பயிற்சிகளை வழங்கி அவர்களை சுயமுயற்சியுடைவர்களாக்குவதே மேற்படி நிறுவனத்தின் பணியாக வன்னி மண்ணில் இவர்களின் பணி தொடர்ந்தவண்ணம் உள்ளது.

வலயக்கல்வித் திணைக்களத்தின் ஆதரவுடன், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் சமுதாய முன்னேற்ற நிலையத்தினரின் பெண்கள் பயிற்சி வேலைத்திட்டத்தினரால் மேற்படி திட்டம் முன்னெடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த இருவருடங்களுக்கு மேலாக அதாவது 15.02.2001 முதல் இந்நிறுவனத்தினர் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

வறுமையிலும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட போரினால் பாதிக்கப்பட்ட இளம் பெண்களை இனங்கண்டு அவர்களுக்குத் தங்குமிடம், உணவு என்பனவற்றினை இலவசமாக வழங்கி அத்துடன் 6 மாத தொழிற்பயிற்சியினையும் வழங்கி வருகின்றனர்.

உதாரணமாக தையல், தையல் இயந்திர திருத்துனர், சிகையலங்காரம், கேக் அலங்காரம் போன்ற தொழிற்பயிற் சிகளை வழங்கிவருவதுடன் 6 மாதத்தில் பூரண பயிற்சி பெற்றதும், அவர்களுக்கு தொழில்வாய்ப்பினை தேடிக்கொடுக்கும் சில நடவடிக்கைகளையும் இந்நிறுவனத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

**சமுதாய முன் னேற்ற நிலைய பெண்கள் பயிற்சித் திட்டத்தில் இன்று 35 பேர் பயிற்சியை நிறைவு செய்கின்றனர்.**



தையல் பயிற்சியை நிறைவு செய்ததும் பிரதேசரீதியாக 'ஒளிர்' தையலகங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அவற்றில் பயிற்சிநிறைவு செய்த பெண்களைப் பணிக்கமர்த்தி வருகின்றனர்.

இதன் மூலம் கிடைக்கப்பெறும் வருமானத்தினை அந்தந்த நிலையங்களில் பணிபுரியும் பெண்களுக்கே வழங்கி வருகின்றனர்.

# சுயமுயற்சியுடையவர்களாக்கும் நிறுவனம்



இந்த அடிப்படையில் கிளிநொச்சி நகரில் இரு 'ஒளிர்' தையலகங்களும், அக்கராயன், விசுவமடு, வட்டக்கச்சி, மாங்குளம், மல்லாவி, முள்ளியவளை ஆகிய பிரதேசங்களில் தலா ஒவ்வொரு ஒளிர்தையலகங்கள் நிறுவப்பட்டு செயற்பட்டுவருகின்றன.

இப்பயிற்சி நெறிக்கான மூன்று ஆசிரியைகள் நிறுவனத்தினரால் நியமிக்கப்பெற்று தற்போது சேவை புரிந்து வருகின்றனர்.

அத்துடன் உழைக்கும் பொழுதினிலே இவர்களைச் சேமிக்கும் திட்டத்திலும் மேற்படி நிறுவனத்தினர் உட்படுத்திவருகின்றமை ஒரு முன்னுதாரணமாக அமைந்துள்ளது.

இவர்கள் மாதாந்தம் சுயமுயற்சியின் மூலம் திரட்டும் பணத்தில் 1/3 பகுதியினை சேமிப்பின் பொருட்டு உழைப்பாளிகளால் வங்கியில் வைக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி நிலையத்தினரால் புதுக்குடியிருப்பில் 30 பெண்களும், கிளி. உருத்திரபுரத்தில் 40 பெண்களும் பயிற்சிகளை வெற்றிகரமாக மேற்கொண்டு இன்று சுயதொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.



தற்போது கிளி ஜெயந்திநகரில் அமைந்துள்ள மேற்படி நிலையத்தில் 35 இளம்பெண்கள், தையல் இயந்திரம் திருத்துதல், தையல், சிகை அலங்காரம், கேக் அலங்காரப் பயிற்சிகளை 6 மாதங்களாக மேற்கொண்டு வருவதுடன் இன்று இப்பயிற்சிகளை நிறைவு செய்கின்றனர்.

இந்நிறுவனத்தின் நடவடிக்கை மாதாந்த செலவீனம் அதாவது நிர்வாக மற்றும் பயிற்சி, தங்குமிடம், உணவு போன்றவற்றிற்காக இரண்டரை இலட்சம் ரூபா செலவிடப்படுவதாக நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு பயிற்சி முடிவிலும் மேலும் மேலும் ஒவ்வொரு தொகுதியினர் மீளவும் தேர்ந்தெடுக்கப்பட்டு சுயதொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக இன்றைய காலகட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்டு தொழில் வாய்ப்பின்றித் திக்கற்றிருக்கும் இளம் பெண்களுக்கு வன்னிப்பெருநிலப்பரப்பில் சமுதாய முன்னேற்ற நிலையத்தினரின் பெண்கள் பயிற்சி வேலைத்திட்டத்தினர் மகத்தான சேவையினை ஆற்றிவருவதென்பது பெருமைக்குரியதொன்றாகும்.

கனகபுரச்சோதி

○ ○ ○



# உலகத்தரம் வாய்ந்த "ராம்கோ"
# கூரைத்தகடுகள் வன்னியிலும்
# தடம்பதித்துள்ளது...

வன்னியில் "ராம்கோ" கூரைத்தகடுகள்
விற்பனைக்கு முகவராண்மை பெற்ற

# பாண்டியன் வாணிபத்தினர்



**வன்னி மாவட்டங்களுக்கு வழங்குநர்களை நியமிக்கவுள்ளனர்.**
முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் வினைத்திறனும்,
நன்மதிப்புமுள்ள வாணிபத்தினர், வழங்குநர் பணியைப் பெறுவதற்கு
எம்மிடம் உடன் தொடர்பு கொள்ளவும்.
வழங்குநர்களுக்கு சிறப்புச் சலுகைகள் உண்டு.

**"ராம்கோ" உங்கள் காவலன்.**

தொடர்புகட்கு: **பாண்டியன் வாணிபம்,**
கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.

(சி-8059)



எமது மக்களுக்கு
தமிழீழ வைப்பகம் வழங்கும்
துரித நகையடைவுக்கடன் சேவை

**உங்கள் நம்பிக்கையின் சின்னம்**

## குறைந்த வட்டி வீதம்

மாதாந்தம் 2% வட்டி மட்டுமே தற்போது அறவிடப்படுகின்றது.
(ஆண்டுக்கு வட்டியாக 24 நூற்றுக்கூறு மட்டும்)

## கூடிய கடன் தொகை

தற்போது கடன் தொகையாக ஒரு பவுணுக்கு
ரூபா 6300/= வரை வழங்கப்படுகின்றது.

## நீடித்த சேவை

தமிழீழ வைப்பகத்தின் சகல கிளைகளிலும்மாலை
3.00 மணி வரை நகையடைவுக்கடன்
சேவையை வழங்குகின்றோம்.

தமிழீழ வைப்பகம் BANK OF TAMILEELAM

# தமிழீழ வைப்பகம்

உங்களின் நிறைவே எங்களின் மகிழ்ச்சி.
வாருங்கள் உங்களின் வளமான வாழ்வுக்கு வழிகாட்டுகிறோம்.

**தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்**

(சி-8038)

## சிந்தனைக்கு

மக்களின் துன்ப துயரங்களில் பங்குகொண்டு, அவர்களின் சுமைகளை நாமும் தாங்கி, அவர்களின் கஷ்டங்களைப் போக்குவதற்குத் திட்டமிட்டுச் செயலாற்றுவதுதான் உண்மையான அரசியல் வேலை.

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM
யாழ். சாலை, கிளிநொச்சி. 07-04-2003

## மக்களின் நிலையுணர்ந்த முடிவு!

அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையில் சிறிலங்கா அரசாங்கம் அரசியல் தீர்வுப் பிரச்சினை பற்றிப் பேச விருப்பம் கொண்டுள்ளதாகவும், ஆனால் விடுதலைப்புலிகள் மக்களின் கவலைகள் நீங்கி மீளக்குடியமர்ந்து இயல்பு நிலை ஏற்பட்ட பின்பே அரசியற் தீர்வு குறித்துப் பேச விருப்பம் கொண்டிருப்பதாக மூத்த தளபதி கேணல் கருணா அவர்கள் தெரிவித்துள்ளமையானது மக்களின் நிலையறிந்த பேச்சாகும்.

கேணல் கருணா அவர்களின் இக்கூற்றுக்கள் விடுதலைப் புலிகள் இயக்கம் அரசியல் தீர்வுப் பிரச்சினை குறித்துப் பேசுவதற்குத் தயாராக இல்லை, பின்வாங்குகின்றது என்ற அர்த்தத்தில் கொள்ளத்தக்கதல்ல. விடுதலைப்புலிகள் இயக்கம் சமஷ்டி ஆட்சி முறை குறித்து ஆராயப் புகுந்துள்ளமையே அவர்கள் அரசியற் தீர்வு குறித்துப் பேசத் தயாராகிவிட்டனர் என்பதன் வெளிப்பாடேயாகும். ஆனால், தற்போதைய நிலையில் மக்களின் இயல்புநிலை திரும்புதல் என்பது இனப்பிரச்சினைக்கான அரசியற்தீர்வு குறித்துப் பேசுவதற்குக் கூட அவசியமான தொன்றாகவுள்ளது.

சிறிலங்கா அரசும், விடுதலைப்புலிகளும் யுத்தநிறுத்த உடன்பாடு ஒன்றில் கைச்சாத்திட்டதுமே யுத்தம் நிறுத்தப்பட்டு விரைவில் மக்களின் இயல்புநிலை தோன்றிவிடும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒரு வருடமும்,ஒரு மாதத்திற்கும் மேலாகியும் மக்களின் இயல்புநிலை தோன்றியதாக இல்லை.

இதேவேளை, விடுதலைப்புலிகளுக்கும் –சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ள நிலையிலும்,சமாதான முயற்சியில் அக்கறை கொண்டவர்கள் கிளிநொச்சியில் பல சந்திப்புக்களை மேற்கொண்டபோதிலும் இயல்பு நிலைத் தோற்றுவித்தல் என்பதில் பெரும் முன்னேற்றம் ஏற்படவில்லை.

இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் விடயத்தில் முதலில் முட்டுக்கட்டையாக உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை எழுந்தது. ஆனால், இப்பிரச்சினைக்கே இதுவரையில் தீர்வு எதையும் அரசாங்கத்தால் கொண்டுவரமுடியவில்லை. இந்திய முன்னாள் படை அதிகாரி லெப்.ஜெனரல் சதீஸ் நம்பியாரின் அறிக்கை கிடைக்கப்பெற வேண்டும் என்ற நிலையில் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

இதை ஒத்தவகையில் மேலும் பல விடயங்கள் இன்னமும் நிறைவு செய்யப்படாமலே உள்ளன. ஆனால்,இவ்வாறானதொரு நிலை புரிந்துணர்வு உடன்பாடு அமுல் செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டை ஏற்படுத்துவதாக மட்டுமல்ல, யுத்தநிறுத்தம், இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு போன்ற விடயங்களில் மக்கள் அவநம்பிக்கை கொள்ளவும் அடிப்படையாக மாறியுள்ளது.

இதற்குக் காரணங்களும் இல்லாமல் இல்லை. ஆரம்பத்தில் இருந்தே சிறிலங்கா ஆயுதப்படையினர் யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபட்டுவரினும் அண்மைக்காலத்தில் அவர்கள் புரியும் மீறல்கள் யுத்தத்தின் விளிம்பிற்கே இட்டுச் செல்லும் அளவினதாக பாரதூரமானதாக உருப்பெற்றுள்ளன. இந்நிலையானது புரிந்துணர்வு உடன்பாட்டின் மீதும் மக்களுக்கு சந்தேகத்தைத் தோற்றுவிப்பதாகியுள்ளது.

இது குறித்து உணரப்படாமலும் இல்லை. போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின்அதிகாரங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும் என உருப்பெற்றுள்ள அபிப்பிராயமே புரிந்துணர்வு உடன்பாட்டின் எதிர்காலம் குறித்துத் தோன்றியுள்ள ஐயப்பாட்டின் அடிப்படையிலானதே ஆகும்.

ஆகையினால், அரசியற்தீர்வு பற்றிப் பேசுவதற்கு முன்பாக, தற்பொழுது அமுலிலுள்ள யுத்தநிறுத்த உடன்பாடு வலுப்படுத்தப்பட வேண்டியதும், அதன்மூலம் மக்களின் இயல்புநிலை தோற்றுவிக்கப்பட வேண்டியதும் அவசியமானதாகும். அவ்வாறு இல்லாதுவிடில், அரசியல்தீர்வென்பதும், அதன் அமுலாக்கம் என்பதும் பேச்சளவிலானதாக மட்டுமே இருக்க முடியும்.

இந்நிலையில், அரசியற் தீர்வு குறித்துப் பேசுவதற்கு முன்பாக மக்களின் இயல்பு வாழ்க்கை குறித்துப் பேசுவதென்பது முக்கியமானதொன்றாகியுள்ளது. ஏனெனில், யுத்தநிறுத்தம் என்பதும், மக்களின் இயல்பு வாழ்க்கை என்பதும் உறுதி செய்யப்படும் பட்சத்திலேயே அரசியல் தீர்வென்பது சாத்தியமானதாகும். ஆகையினால் இன்று கூட யுத்தநிறுத்தத்தை உறுதி செய்தது குறித்தும், மக்களின் இயல்புவாழ்க்கைக்கு வழி ஏற்படுத்துவது குறித்துமே பேச்சு நடத்துவது அவசியமானதாகியுள்ளது. ஆகையினால், அடுத்த சுற்றுப்பேச்சிலும் மக்களின் இயல்பு வாழ்க்கை குறித்த விடயத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதென்ற புலிகளின் நிலைப்பாடு சரியானது என்றே கொள்ள வேண்டும்.

# நியமனக் கடிதங்கள் கையில் கிடைக்கும் வரை போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானம்

## தொண்டராசிரியர்கள் அறிவிப்பு

தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி வடக்குக் - கிழக்கு மாகாண தொண்டராசிரியர்கள் நேற்றும் 36 ஆவது நாளாக தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சின் முன்பாக வடக்கு - கிழக்கில் உள்ள ஆயிரம் தொண்டராசிரியர்களுக்கான நிரந்தர நியமனக் கோரிக்கையுடன் சுழற்சி முறையிலான உண்ணா விரதப் போராட்டத்தினை நேற்றும் மேற்கொண்டனர்.

தமது நிரந்தர நியமனத்திற்கான முடிவுகளை இன்னமும் ஒரு வாரத்திற்குள் தெரிவிப்பதாக அரச தரப்பு அறிவித்தபோதும் இந்தப் போராட்டத்தினை தமக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் தங்களது கையில் கிடைக்கப் பெறும்வரை தொடர்ந்து முன்னெடுப்பது என அவர்கள் தீர்மானித்துள்ளனர். (சோ)

# இலங்கையில் 5 இலட்சம் குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கவேண்டியுள்ளன

## அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் குடியிருப்புத் தேவையினைப் பூர்த்திசெய்ய மேலும் ஐந்து இலட்சம் வீடுகளை அமைக்கவேண்டியுள்ளதாக வீடமைப்புப் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்..

இவ்வளவு தொகையான வீடுகளை அமைப்பது என்பது அரசாங்கத்தால் மட்டும் செய்ய முடியாது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். இதன்காரணமாக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கும், வீடமைப்புத் திட்டங்களுக்கும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெற வேண்டியிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். தனியார் நிறுவனங்களின் அனுசரணையுடன் திருகோணமலைப் பகுதியில் புதிய. வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பித்துவைக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் சுமார் ஒரு இலட்சம் பேருக்கு உடனடியாக வீடுகள் தேவைப்படுவதாகவும் அவர் கூறினார்.

# மாவட்ட மட்ட பாடசாலை உடற்பயிற்சிப் போட்டிகள்

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் முல்லை. மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டி நேற்று முன்தினம் காலை 9.45 மணியளவில் திருமதி மைக்கல் ராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மங்கல விளக்கினை ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபர் செல்வி விஜயலக்சுமி ஏற்றிவைத்தார். தேசியக்கொடியினை ஒட்டுசுட்டான் கோட்டக் கல்வி அதிகாரி சி.ஜெயபாலன் ஏற்றினார்.

பெண்கள் பிரிவு உடற்பயிற்சிப் போட்டியில் 1ஆம் இடத்தை மு/வித்தியானந்தா கல்லூரியும், 2ஆம் இடத்தை மு/கொக்கிளாய் அ.த.க பாடசாலையும், 3ஆம் இடத்தை மு/புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலையும், ஆண்கள் பிரிவில் மு/புதுக்குடியிருப்பு றோ.க வித்தியாலயம் 1ஆம் இடத்தையும், 2ஆம் இடம் கொக்கிளாய் அ.த.க பாடசாலையும், 3ஆம் இடத்தை முத்துஐயன்கட்டு இடதுகரை அ.த.க பாடசாலையும் பெற்றுக்கொண்டன. (05)

# உலகை அச்சுறுத்தும் வைரஸ் காய்ச்சல்; சிறிலங்காவிலும் முன்னேச்சரிக்கை நடவடிக்கை!

(கொழும்பு)

உலகில் பரவிவரும் நிமோனியா நோயைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சிறிலங்கா சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது. அனைத்துப் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்களுக்கும் சுகாதார நிலையங்களுக்கும் இது தொடர்பான தகவல்கள் அனுப்பப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நோயின் அறிகுறிகள் எங்கேனும் தென்பட்டால் அதனை உடனடியாக அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பயணிகள் மூலம் சிறிலங்காவிற்குள் நோய் பரவுவதைத் தடுப்பதற்கும் சுகாதார அமைச்சு பொருத்தமான நடவடிக்கைகளை விமான நிலையத்தில் ஏற்படுத்தியுள்ளது.

இந்நோய் தொடர்பான தேடல் பணிகளில் ஐக்கிய ஆய்வு நிறுவனம் தற்போது ஈடுபட்டிருக்கின்றது. இதற்கான வசதிகளைச் சுகாதார அமைச்சு ஆய்வு நிறுவனத்திற்கு வழங்கியிருக்கின்றது.

விமான நிலையத்தில் இருக்கும் வைத்திய நிபுணர்கள் இந் நோய் தொடர்பான விழிப்புணர்ச்சியை அனைத்துப் பயணிகளுக்கும் ஏற்படுத்தி வருகின்றனர். ஹொங்கொங், சீனா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்து வரும் பயணிகளிடையே அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. அத்தோடு பொது மக்களும் இந்த நோய் குறித்து விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனவும் சுகாதார அமைச்சு கேட்டிருக்கின்றது.

## வேண்டுகை

(மட்டக்களப்பு)

சித்திரைப்புத்தாண்டு சிறப்புற்று அமைய கலக்கமுற்ற சிறார்களின் கண்ணீரைத் துடைக்கவும், ஏங்கும் பிஞ்சுமனங்களுக்கு உதவவும் கரம்கொடுங்கள் என மட்டக்களப்பு மாவட்ட ஆதரவற்ற இல்லங்களின் கூட்டமைப்பினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

புத்தாண்டுத் தினத்திலே அநாதையில்லங்களில் வாழும் ஆதரவற்ற சிறார்களுக்கு புத்தாடை வழங்கி உணவுப் பண்டங்களைக் கொடுத்துதவ முன்வர வேண்டுமெனத் தலைவர் சி. ஆலாலசுந்தரம் கேட்டுக்கொண்டுள்ளார்.

## இன்று அறிக்கை சமர்ப்பிப்பு

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையைத் தீர்ப்பதற்கு கல்வி அமைச்சினால் மூவாயிரம் ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும், இது தொடர்பான அறிக்கையொன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்று 7ஆம் திகதி சமர்ப்பிக்கப்படுமெனவும் அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு உறுதியளித்துள்ளார்.

தமிழ்மொழி மூலமான ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பாகத் தமிழ்மொழி மூலமான ஆசிரியர்களின் தொழிற்சங்கம் அமைச்சரைச் சந்திதத வேளையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## தொடர்ந்தும் சீர்குலைப்பு!

மட்டக்களப்பு நகரின் பல இடங்களில் ரெலிக்கொம் நிறுவனத்திற்குச் சொந்தமான வயர்கள் இனந் தெரியாதவர்களால் கடந்த வியாழன் சேதமாக்கப்பட்டுள்ளது.

இதனால் 500க்கு மேற்பட்ட தொலைபேசிகள் செயலிழந்துள்ளன. சேதவிபரங்கள் மதிப்பிடப்பட்ட பின்பு திருத்த வேலைகள் உடன் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ரெலிக்கொம் முகாமையாளர் கூறியுள்ளார்.

# சிறிலங்காவின் போர் நடவடிக்கைகள் தமிழர் பொருளாதாரத்தைச் சீர்குலைத்தது

## மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி றமேஸ்

கடந்த கால சிறிலங்கா அரசின் போர் நடவடிக்கைகள் தமிழ் மக்களின் பொருளாதாரத்தை சீர் குலைத்துள்ளது என மட்டு-அம்பாறை சிறப்புத்தளபதி றமேஸ் இரு தினங்கள் நடைபெற்ற கால்நடை வளர்ப்போருக்கான பயிற்சிநெறி நிகழ்வின் இறுதிநாள் நிகழ்வில் உரை நிகழ்த்துகையில் தெரிவித்துள்ளார். இப்பயிற்சி நெறி நேற்று முன்தினமும், நேற்றும் இடம்பெற்றது.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்கள் சிறிலங்காப் படைகளின் போர் நடவடிக்கைகளால் பெரும் அழிவுகளை சந்தித்தது மட்டுமல்லாது எமது தமிழர் தாயகத்தின் தமிழ் மக்களின் பொருளாதாரமே பெருமளவு பாதிப்படைந்துள்ளது மட்டு-அம்பாறை மாவட்டங்களை பொறுத்தவரை இங்கு மிகக்கூடிய கால் நடைகள் உள்ளன. இருந்தும் கால்நடைகளினால் போதியளவு வருமானம் பெறமுடியாது உள்ளது.

போர் சூழல் காரணமாக கடந்த காலத்தில் கால்நடை வளர்ப்போர்கள் உரிய வருமானத்தைப் பெறுவதற்கு சிறிலங்கா அரசு தடைசெய்திருந்தது தற்போதைய சமாதான காலத்தில் இத்தகைய பயிற்சி வகுப்புகளின் மூலம் தமிழ் மக்கள் தமது பொருளாதாரத்தை கட்டியெழுப்பி எதிர்காலத்தில் தமது சொந்தக்கால்களில் நிற்கவேண்டியது அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் நிசாம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மட்டு, அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் அவர்களும் கலந்து கொண்டார். அத்துடன் 600க்கு மேற்பட்ட கால் நடைவளர்ப்போர் கலந்து கொண்டிருந்தனர்.



ஆனையிறவுக்கும் பரந்தனுக்கும் இடையில் யாழ்ப்பாணத்தில் இருந்து கல் ஏற்றியவாறு கிளிநொச்சி நோக்கிவந்து கொண்டிருந்த பார ஊர்தி ஒன்று, சேதமடைந்த பாலம் ஒன்றில் குடைசாய்ந்துள்ளது.

# முதல் 'சார்ஸ்' நோயாளி கொழும்பில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து சிறிலங்காவிற்கு நேற்று வந்து சேர்ந்த இருவருக்கு 'சார்ஸ்' வைரஸ் தொற்றியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து அவர்கள் இருவரும் தத்தமது நாடுகளுக்கு சிறிலங்கா அதிகாரிகளால் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

குவைத்திலிருந்து கொழும்பிற்கு வந்த பெண்மணிக்கு 'சார்ஸ்' நோய் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

குவைத்தில் விமானப் பணிப்பெண்ணாகப் பணியாற்றி வந்த இவர், நேற்று கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வந்து இறங்கியதும் விமான நிலையத்திலுள்ள சுகாதாரத்திணைக்களத்தினர் அப்பெண் மணியைப் பரிசோதித்த போது அவரில் 'சார்ஸ்' வைரஸ் தொற்றியுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து அப்பெண்மணி அங்கொடக்கு அனுப்பப்பட்டு பின்னர் அவரது நாட்டிற்கே அதிகாரிகளால் திருப்பியனுப்பப்பட்டுள்ளார்.

இதேவேளை, கடல் மார்க்கமாக சிறிலங்காவிற்கு வந்த இன்னொருவருக்கும் 'சார்ஸ்' வைரஸ் தொற்றியுள்ளது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அவரும் நேற்று திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

### பின்லாந்து...

கடந்த திங்கட்கிழமை நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் தமது ஆய்வுப்பயணத்தை இவர்கள் ஆரம்பித்தபோது நோர்வேயின் உதவி வெளிநாட்டமைச்சர் விதார் கெல்கேசனால் வரவேற்கப் பட்டனர். இதன்போது உரையாற்றிய கெல்கேசன் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினரது பங்களிப்பும் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. அத்தோடு சமாதான நடவடிக்கைகளை மூன்று விதமாகப் பிரிக்கலாம். அவற்றில் முதலாவது பாதுகாப்பு, இரண்டாவது பொருளாதார மற்றும் மீள்குடியேற்ற அபிவிருத்தி, மூன்றாவது அரசியல் முனைப்பு என்று விபரித்த அவர் இவை மூன்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன என்றார்.

இதனையடுத்து அரசியல் குழுவினர் நோர்வேயின் பாராளுமன்றத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டனர். மேலும் இவர்கள் கடந்த திங்கட்கிழமை நோர்வேயின்இடதுசாரி சோஷலிஸ்கட்சி மற்றும் கன்சர் வேட்டிங்கட்சியினரையும் சந்தித்து பேசியுள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை ஒஸ்லோவின்வடக்கே அமைந்திருக்கும் இராணுவத்தளத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டனர் அங்கு நோர்வே படையினரது அமைதி காப்பு,கண்ணிவெடி அகற்றல் கலவரத்தடுப்பு போன்ற நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. புதன்கிழமை ஓய்வுபெற்ற நோர்வேயின் பிரதமந்திரியரசர் உட்பட பல அரசியல் அறிஞர்கள் இந்த அரசியல் குழுவினருக்கு சொற்பொழிவுகளை நிகழ்த்தினர் தொடர்ந்து சுவீடன் தலைநகர் ஸ்ரொக்கோமிற்குசென்ற அரசியல் குழுவினர்பாராளுமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தொடர்ந்து சுவீடன் வெளியுறவுக் குழுவினருடன் இவர்கள் பேச்சுக்களை நடத்தினர் வெள்ளிக்கிழமை சுவீடனின் பொலிஸ் தலைமையகத்திற்குச் சென்ற இவர்கள் காவல் நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தனர் அன்று பிற்பகலில் ஸ்ரொக்கோம் பல் கலைக்கழகத்திற்குச் சென்ற இக்குழுவினர் சுவீடனின் பத்திரிகைச்சுதந்திரம் குறித்து கலந்துரையாடினர் மேலும் சுவீடன் நாட்டினரது மனிதாபிமானப் பணிகள் மற்றும் அபிவிருத்தி உதவிகள் குறித்தும் ஆராய்ந்துள்ளனர்.

சுற்றுப் பயணத்தை அங்கு முடித்துக்கொண்டகுழுவினர் பின்லாந்திற்குச் சென்றுள்ளனர். இதனையடுத்து டென்மார்க்கிற்கும் இவர்கள் விஜயம் செய்யவுள்ளனர். இவர்கள் தமது இரண்டாவது கட்ட சுற்றுப்பயணத்தில் சுவிற்சர்லாந்து, யேர்மனி,மற்றும் ஸ்பெயின் ஆகியநாடுகளுக்குச் செல்லவுள்ளனர்.இது மே மாத ஆரம்பத்தில் இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.


# அமெ.இராணுவத் தொடரணிமீது அமெ. விமானம் குண்டுவீச்சு!

## 4 அமெ.படையினர் 14 குர்திஸ் தீவிரவாதிகள் பலி

வடக்கு ஈராக்கில் அமெரிக்க யுத்தவிமானமொன்று அமெரிக்க சிறப்புப்படையினர் மற்றும் குர்திஸ் இன தீவிரவாதிகளின் வாகன அணி மீது நடத்திய தாக்குதலில் குறைந்தது 18பேர் கொல்லப்பட்டனர்.

நேற்று இடம்பெற்ற இத்தாக்குதலில் அமெரிக்கப் படையினர் நால்வரும் 14குர்திஸ் தீவிரவாதிகளுமாக 18 பேர் கொல்லப்பட்டுள்ளனர், 45க்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இவ்வாகன அணியில் சென்ற அமெரிக்கப் படை அதிகாரி தமக்கருகிலுள்ள ஈராக் படைநிலை மீது தாக்குதல் நடத்துமாறே அமெரிக்க குண்டு வீச்சு விமானத்திற்கு தகவல் கொடுத்திருந்தார். இதனையடுத்து விமானத்திலிருந்து வீசப்பட்ட குண்டு தவறுதலாக அமெரிக்க, குர்திஸ் வாகன அணி மீது விழ்ந்துவிட்டதாக அமெரிக்க விமானப்படை அதிகாரி தெரிவித்துள்ளார்



தாக்குதலில் சேதமான வாகனம்

இத்தாக்குதலில் காயமடைந்தவர்களில் குர்திஸ் சனநாயகக் கட்சித் தலைவரின் உறவினர் ஒருவரும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### கருத்தப்பாலம்...

தெரிவித்தனர்.

இராணுவ முகாம் விஸ்தரிப்பதற்கு புல்டோசர் கொண்டு மண் அரண்களும் முகாமைச் சுற்றி பதுங்குகுழிகளும் அமைப்பதாகப் பொதுமக்கள் புகார் செய்துள்ளனர். மேற்படி முகாம் அமைக்கும் பகுதிக்கு அண்மையில் இந்துக் கோயில் ஒன்றும் இருப்பதால் அவ்வாலயத்துக்கு செல்லும் இந்து மக்கள் தாம் சுதந்திரமாக ஆலயத்தில் வழிபட முடியவில்லை என கவலை அடைந்துள்ளனர்.

### சமாதான...

இதற்கான முயற்சிகளை சிறிலங்காவிற்கான நோர்வேத் தூதரகமும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் மேற்கொண்டு வருகின்றன என இந்தியத்தூதுவர் நிருபம் சென் கருத்து வெளியிட்டுள்ளார்.

முல்லைத்தீவுக்கு வடக்கே சுண்டிக்குளம் கடற்பகுதியில் சீன மீன்பிடிப்படகு மீதான தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொள்ள வில்லை என்றும் வடக்கு-கிழக்கு கடற்பரப்பில் செயற்படும் ஆயுத சக்தி ஒன்றே இத்தாக்குதலை நடத்தியிருக்க வேண்டும் என்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்திருந்தது.

இந்த விவகாரத்தில் இந்தியாவின் கருத்து மாறுபட்டதாக இருக்கின்றது என்றும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் இந்த அறிவிப்பானது இந்தப் பகுதியில் இந்திய ஆயுத சக்திகள் செயற்படுவதாக ஒரு எண்ணத்தைத் தோற்றுவிக்கலாம் என்று இந்தியத் தூதரகம் கருதுவதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### பாக்தாத்...

கர்பலாவிலும் அமெரிக்கப் படைகள் ஈராக் படைகளின் கடும் எதிர்ப்பைச் சந்தித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேசமயம், தெற்கில் பிரிட்டிஷ் படைகள் அமெரிக்கப்படையின் உதவியுடன் பஸ்ரா நகருக்குள் நேற்று பிரவேசித்திருப்பதாகவும் பிரிட்டிஷ் படைத்தரப்பு தெரிவிக்கின்றது.

இதேவேளை, பாக்தாத் நகரை நோக்கி வரும் அமெரிக்கப் படைகள் மீது ஈராக் படையினர் கடும் தாக்குதலை நடத்தி வருவதாகவும் - நேற்று இரவில் பாக்தாத்தில் இருந்து கடும் ஆட்லறித் தாக்குதலை ஈராக் படைகள் நடத்தியதாகவும் கூறப்படுகின்றது.

அத்தோடு, பாக்தாத் நகர் மீதான தாக்குதலை எதிர்கொள்ளவும், அமெரிக்கத் துருப்புக்களுககுப் பதிலடி கொடுப்பதற்கும் ஈராக் படைகள் தயாராகி வருவதாகவும் கூறப்படுகின்றது. ஆயினும் எந்த வகையில் ஈராக் படையினரின் தாக்குதல்கள் இருக்குமென எதிர்வு கூறமுடியாதுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஈராக் அரசு பாக்தாத் நகரில் நேற்று மாலை 6.00 மணியில் இருந்து இன்று அதிகாலை 6.00 மணி வரை வீதிகளில் மக்கள் நடமாட்டத்திற்குத் தடை விதித்துள்ளது இதன் பிரகாரம் நேற்று மாலையில் இருந்து நகருக்குள் எவரும் நுழைவதோ அன்றி வெளியேறுவதோ தடைசெய்யப்பட்டுள்ளது.

ஈழநாதம் பணிமனையில்...

பரீட்சைப் பெறுபேறுகளை இணையத்தளத்தில் பார்வையிடலாம்

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2002 பெறுபேறுகளை கிளிநொச்சி பிரதான வீதியிலுள்ள ஈழநாதம் விளம்பரப்பணிமனையில் இணையத்தளத்தினூடாகப் பார்வையிடலாம் சுட்டிலக்கத்துடன் வருகைதரவும்

கட்டணம்: 25 ரூபா மட்டும்

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.